தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

தமிழ் மரபுத் தினை

Bulletin of Tamil Heritage Foundation international - THFi

# ஒலி நூல்கள்

மே – 2026

43

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின்

# தமிழ் மரபுத் திணை மாதாந்திர இதழ்

***Tamil Marabu Thinai***

தமிழ் மரபுத் திணை — 43

திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி

[மே — 2026]

## தமிழ் மரபுத் திணை

ஆசிரியர்:
முனைவர் க. சுபாஷிணி
பொறுப்பாசிரியர்:
மரிய ஜெரின்

**Websites:**
https://www.tamilheritage.org
https://academy.tamilheritage.org

**Facebook:**
Tamil Heritage Foundation
THF Student Heritage Network
Tamil Heritage Foundation Research - Korea India
Der Kural Des Thiruvalluvar

**Youtube:**
https://www.youtube.com/thfichannel

**Instagram:**
https://instagram.com/TamilHeritageFoundation

**Twitter:**
https://twitter.com/HeritageTamil

**E-mail:** mythforg@gmail.com

**THFi - HQ:** Germany

**Branches:** India, Srilanka, Malaysia, Denmark, Norway, France, USA.

**Thinai Monthly Newsletter:**
https://thf-news.tamilheritage.org/category/thinai

ஆசிரியர் குழு :

1. முனைவர் க. சுபாஷிணி
2. முனைவர் தேமொழி
3. முனைவர் சிவ. இளங்கோ
4. முனைவர் கௌதம சன்னா
5. முனைவர் பக்தவத்சல பாரதி
6. முனைவர் கண்ணன் நாராயணன்

*Attribution-NonCommercial-ShareAlike*
*4.0 International (CC BY-NC-SA 4.0)*

~·~·~·~·~·~·

குறிப்பு:
தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் பதிப்பகப் பிரிவின் வெளியீடு இது. இந்த நூல் தமிழ் ஆய்வுப்புலத்தின் தேவை கருதி அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்நூலை மறுபதிப்பு செய்ய விரும்புவோர் அல்லது ஏதாவது ஒரு வகையில் தங்கள் படைப்புகளில் பயன்படுத்த விரும்புவோர் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பினைத் தொடர்பு கொண்டு அனுமதி பெற்று உசாத்துணைகளை வழங்கி மீள்பதிப்பு செய்யலாம்.
- தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் பதிப்பகப் பிரிவு

இணையதள முகவரி: https://tamilheritage.org

தமிழ் மரபுத் திணை இதழுக்குத் **தங்களுடைய படைப்புகளை** அனுப்ப விரும்புபவர்கள் தங்களுடைய வரலாறு, மொழியியல், தமிழ் இலக்கியம், சமூகவியல் மற்றும் மானிடவியல் பொருண்மைகளில் அமைந்த படைப்புகளை
**editorthfjournal@gmail.com**
என்ற **மின்னஞ்சல் முகவரி**க்கு அனுப்பி வைக்கலாம்.

# உள்ளடக்கம்

தலையங்கம்.....7

ஒலி நூல்களாகக் கேட்டு மகிழ்க, பயன்பெறுக!
.....12

1. உலகமயமாதலை எதிர்கொள்ளும் தமிழ்ச் சமூகம்!.....15

2. திருக்குறளின் புகழ்பெற்ற ஜரிஷ் மொழிபெயர்ப்பாளர்.....26

3. கணக்கு, அறிவு.....33

4. மொழியில் இயங்கியல்.....37

5. மதுரை: இன்றும் அன்றும் — 1.....53

6. நன்னெறி வாழ்விற்கு முதன்மை அளித்த வ. சுப. மாணிக்கம்.....56

7. தூத்துக்குடி – சிற்றூர் முதல் குரூஸ் பர்னாந்து வரை: நூல் திறனாய்வு.....64

8. அரிய நூல்: தெலுங்கை வளர்த்த தமிழகமும் மராத்தியரும்.....69

9. உலகிய நல்லூர் புத்தர்.....88

10. தமிழ் மரபு அறக்கட்டளை ஆய்வுப் பயணம் / களப்பணி.....104

க. தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகம்.....104

உ. ராஜராஜன் கலைக்கூடம்.....107

ங. நார்த்தாமலை களப்பணி.....109

ச. டாக்டர் மா இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வு மையம்.....111

11. தமிழ் மரபு அறக்கட்டளை நிகழ்ச்சிகள்.....113

க. "தனிநாயக அடிகளாரின் தமிழியல் பங்களிப்பு" நூல்கள்.....113

12. தமிழ் மரபு அறக்கட்டளை செயல்பாடுகள்...116

க. இணையவழி திசைக்கூடல் நேரலைகள்..116

உ. இணையவழி இலக்கியக்கூடல் நேரலைகள் .....118

ங. சுவலி — ஒலிநூல்கள்.....119

ச. தமிழ் மரபு அறக்கட்டளை காணொளி வெளியீடு.....123

# தலையங்கம்

— முனைவர் க. சுபாஷிணி

வணக்கம்.

ஓலைச்சுவடிகளில் இருந்த தமிழ் இலக்கியங்கள் 16ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியில் யோகானஸ் குட்டன்பர்க் அவர்களால் அச்சு எந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் தாள்களில் அச்சு வடிவம் பெறத் தொடங்கின. மிகக் குறிப்பாக 18ஆம் நூற்றாண்டின் இறுதி தொடங்கி 19ஆம் நூற்றாண்டு 20ஆம் நூற்றாண்டு ஆகிய காலகட்டங்கள் தமிழ் இலக்கியங்கள் ஓலைச்சுவடிகளில் இருந்து தாள் அச்சு நூலாக

பரிணாம மாற்றம் அடைந்த முக்கியமான ஒரு காலமாகும்.

அக்காலகட்டத்தில் தமிழறிஞர்கள் மட்டுமன்றி ஐரோப்பிய அறிஞர்களின் முயற்சியினாலும் பல தமிழ் நூல்கள் அச்சு வடிவில் வெளிவரத் தொடங்கின. தமிழில் எழுதப்பட்ட அனைத்து நூல்களும் அச்சு வடிவம் பெறப்பட்டு விட்டதா என்றால் "இல்லை" என்பது தான் அதற்கான விடையாக அமையும்.

ஏனெனில் தொடக்க காலத்தில் ஓலைச்சுவடிகளில் இருந்த நூல்களை அச்சு வடிவிற்குக் கொண்டு வர முயற்சி செய்தவர்களது எண்ணிக்கை குறைவு. அதற்கும் மேலாக பொருளாதார பலம் பொருந்திய சூழலில் மட்டுமே இதனை சாத்தியப்படுத்த முடிந்தது. ஆகவே சில நூல்கள் அச்சு வடிவம் கண்டன, பல நூல்கள் மறைந்து போயின. இப்படி தமிழ் மக்கள் இழந்த நூல்கள் ஏராளம்.

அச்சு வடிவில் வெளிவந்து நூல்களை கைகளில் எடுத்து வாசித்த அனுபவத்திலிருந்து 21ஆம் நூற்றாண்டில் பெரும் மாற்றம் ஏற்பட்டது.

21ஆம் நூற்றாண்டில் கணினி அது தொடர்பான தொழில்நுட்ப வளர்ச்சி விரிவடைந்த காரணத்தினால் மடிக்கணினி, செல்பேசி போன்ற எளிமையான கருவிகளில் நூல்களை வாசிக்கும் வாய்ப்பினை அனைத்து தரப்பினருக்கும் வழங்கியது. பொருளாதாரம் இதற்கு ஒரு தடையல்ல என்ற வகையில் எல்லோரும் நூல்களை வாசிக்கக் கூடிய வாய்ப்பு இந்தக் கணினி யுகத்தில் அமைந்தது. அதன் அடிப்படையில் நூல்களை வாசிப்பது என்பதைக் கடந்து ஒலி நூல்களாகக் கேட்டு பயன்பெறும் வாய்ப்பினைத் தொழில்நுட்பம் வழங்கி இருக்கின்றது.

இந்தத் தொழில்நுட்ப வளர்ச்சியைத் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு தொடர்ந்து தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படுத்தி வருகின்றோம். அத்தகைய ஒரு பணியாக அமைவது தான் நமது ஏராளமான திட்டங்களில் ஒன்றான "சுவலி" திட்டம் (https://suvali.tamilheritage.org/).

இத்திட்டத்தின் வழி தமிழ்நாடு அரசினால் நாட்டுடைமையாக்கப்பட்ட தமிழ் நூல்களைத் தன்னார்வலர்கள் வாசித்து அந்த நூல்களுக்கு மக்களிடையே அறிமுகத்தை வழங்கக்கூடிய நல்

வாய்ப்பினைத் தமிழ் மரபு அறக்கட்டளை வழங்கி வருகின்றோம்.

மாற்றுத்திறனாளிகள், குறிப்பாக பார்வைத் திறன் அற்றவர்கள் இத்தகைய ஒலி நூல்களைக் கேட்டு பயன்பெற முடிகின்றது. நீண்ட தூர வாகனப் பயணத்தில் இருப்பவர்கள் இத்தகைய நூல்களைக் கேட்டுக்கொண்டே நெடுதூர பயணத்தை எளிதாக்கலாம். சாலையில் நடை பயிற்சி செய்பவர்கள் காலையில் தங்கள் காதுகளில் ஒலிக்கருவியை இணைத்துக் கொண்டு இந்த ஒலி நூல்களைக் கேட்டு

மகிழ்ந்தவாறு தங்கள் உடற்பயிற்சியை மேற்கொள்ளலாம். வீட்டில் இருந்து கொண்டு மாலை நேரங்களில் தேநீரையும் காப்பியையும் பலகாரங்களையும் சுவைத்துக் கொண்டு இந்த ஒலி நூல்களை கேட்டு பயன்பெறலாம். இப்படி பல்வேறு வகையில் ஒலி நூல்கள் பொதுமக்களுக்கு பயன் தரக்கூடியது.

தமிழ் மரபு அறக்கட்டளையின் பணிகள் ஒவ்வொன்றும் ஆய்வாளர்களுக்கும் ஆய்வின் மீது நாட்டமுள்ள பொதுமக்களுக்கும் மிகுந்த பயனளிக்கக் கூடியவை. அனைவரும் நமது "சுவலி" வலைப்பக்கத்தில் வெளியிடப்படுகின்ற ஒலி நூல்களை கேட்டு பயன்பெற வேண்டும் என்பதே தமிழ் மரபு அறக்கட்டளையின் எதிர்பார்ப்பு.

தமிழால் இணைவோம்!

அன்புடன்
முனைவர் க. சுபாஷிணி
தலைவர்
தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

# ஒலி நூல்களாகக் கேட்டு மகிழ்க, பயன்பெறுக!

— மரிய ஜெரின்

தமிழ் மரபுத் திணை மாதாந்திர மின்னிதழ் வழியாக உங்களுடன் உரையாடுவதில் மகிழ்ச்சி.

ஒரு வளமான இலக்கியச் செல்வங்களை கொண்ட மொழி தன்னுடைய தொடர்ச்சியை நிலைநிறுத்த ஆய்வுலகின் பங்கு மிகவும் இன்றியமையாதது. அவ்வகையில் தமிழ் மரபு அறக்கட்டளை கடந்த இருப்பத்தைந்து ஆண்டுகளாக தமிழின் தொண்மம் மற்றும் வரலாற்று ரீதியான தகவல்களை சேகரித்து அவற்றை அனைத்து தரப்பினரும் எளிய முறையில் அறியும் வகையில் காலத்திற்கேற்ப புதுப்புது தொழில்நுட்பத்தை கையாண்டு அனைவரும் பயன்பெரும் வகையில் ஓர்

அரும்பெரும் பணியை நெடுங்காலமாக செய்து கொண்டுவருகிறது.

இவ்வகையான தொடர் முயற்சிகள் ஆய்வுலகின் பார்வையை ஒரு குறுகிய வட்டத்துக்கள் மட்டும் வைக்காமல் விரிந்த பார்வையை ஆய்வாளர்களுக்கு காட்டுகிறது. இன்னும் செய்ய வேண்டிய பணிகள் ஏராளம் என்பதையும் முன்வைக்கிறது. அவற்றிற்கு செயல்வடிவம் கொடுப்பதன் மூலம் தமிழ் மொழியின் வளம் பேணப்பட்டு வளர்ச்சிக்கான அடித்தளம் உருவாகும் என்பதில் சந்தேகமில்லை.

தலையங்கத்தில் தலைவர் சுபாஷிணி அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று நூல்களை வாசிப்பது என்பதைக் கடந்து ஒலி நூல்களாகக் கேட்டு பயன்பெறும் வகையில் தமிழ் மரபு அறக்கட்டளையின் "சுவலி" திட்டம் செயல்பட்டு வருகிறது. இதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் இவ்விதழின் முன் அட்டைப்படம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. பின் அட்டைப்படம் மெரினாவில் அண்மையில் தமிழக முதல்வரால் திறக்கப்பட்ட "கற்றனைத் தூறும் அறிவு" சிலைகள். கற்றல் குறித்த இப்படம் வளர்ச்சி என்கிற அறிவுப் பாதையை நோக்கி

செல்லும்போதுதான் மடமை என்கிற அடிமைச்சங்கிலி உடைத்தெரியப்படும் என்பதைக் இச்சிலைகள் காட்டுகிறது.

தொடர்ச்சியாக இவ்விதழ் தமிழ் மரபு அறக்கட்டளை உறுப்பினர்களால் எழுதப்பட்ட படைப்புகளைத் தாங்கியும் தமிழ் மரபு அறக்கட்டளையின் களப்பணிகள், செயல்பாடுகள், காணொளிகள், நூல்கள், ஆகிய பல்வேறு செய்திகளை உள்ளடக்கிய வகையிலும் ஒரு தொகுப்பாக வெளிவந்துள்ளது. அனைவரும் வாசித்து பயன்பெறுக! நன்றி!

அன்புடன்
மரிய ஜெரின்
பொறுப்பாசிரியர்
தமிழ் மரபுத் திணை இதழ்

# 1. உலகமயமாதலை எதிர்கொள்ளும் தமிழ்ச் சமூகம்!

— மதிவதனி

பாரம்பரியத்தின் வேர்களை உறுதியாகப் பிடித்தபடியே நவீன உலகின் வாய்ப்புகளை ஏற்றுக்கொள்வதே தமிழ்ச் சமூகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு வழிகாட்டும் பாதையாகும். உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழர்கள் ஒன்றிணைந்து செயல்பட்டால், தமிழும் தமிழர் பண்பாடும் உலகளாவிய அளவில் மேலும் வலுவடையும்.

அறிவியல் வளர்ச்சி, தகவல் தொழில்நுட்பப் புரட்சி, உலகளாவிய வர்த்தக உறவுகள் மற்றும் மக்கள் இடம்பெயர்வு ஆகியவை உலகத்தை ஒரே சமூகமாக இணைத்து வருகின்றன. உலகமயமாதல் என்பது வெறும் பொருளாதார மாற்றமல்ல; அது சமூக, பண்பாட்டு, அரசியல் மற்றும் மனித உறவுகளின் அமைப்பையே மாற்றும் சக்தியாகவும் விளங்குகிறது.

இந்த மாற்றத்தின் மத்தியில் பல மொழிகளும் பண்பாடுகளும் தங்களது அடையாளத்தைப்

பாதுகாத்துக் கொண்டு புதிய சூழல்களுக்கு ஏற்ப மாற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்ச்சமூகமும் இந்த மாற்றங்களை எதிர்கொண்டு வருகிறது. அதே நேரத்தில், தமிழ்ச் சமூகத்தின் அடையாளத்தை மறுபரிசீலனை செய்யும் நிலையை உருவாக்கியுள்ளன.

தமிழர்கள் இன்று உலகம் முழுவதும் பரந்து வாழும் உலகளாவிய சமூகமாக மாறி உள்ளனர். முன்பு ஒரு நாட்டின் வாழ்க்கை முறை, கலாசாரம் மற்றும் பொருளாதார அமைப்பு பெரும்பாலும் அந்த நாட்டின் எல்லைக்குள் மட்டுமே நிலைத்திருந்தது. ஆனால், இன்று தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி, இணையம், விமானப் போக்குவ ரத்து, உலகளாவிய வர்த்தகம் போன்ற காரணங்களால் நாடுகளுக்கு இடையிலான எல்லைகள் மங்கிவிட்டன.

ஒரு நாட்டில் உருவாகும் தொழில்நுட்பம் சில நிமிஷங்களில் உலகம் முழுவதும் பரவுகிறது. ஒரு நாட்டின் பொருளாதார மாற்றம் மற்ற நாடுகளையும் பாதிக்கிறது. அதேபோல், ஒரு நாட்டின் பண்பாட்டு வெளிப்பாடுகள் மற்ற சமூகங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

உலகமயமாதல் பல்வேறு பண்பாடுகளை ஒன்றோடொன்று இணைக்கிறது மறுபுறம் அந்தப் பண்பாடுகளின் தனித்துவ அடையாளத்தை சவாலுக்கு உட்படுத்துகிறது. இதனால், பல சமூகங்கள் தங்களுடைய பாரம் பரியத்தைப் பாதுகாத்தபடியே புதிய உலகச் சூழலுக்கு ஏற்ப மாற வேண்டிய கட்டாயத்தில் உள்ளன.

தமிழ்ச் சமூகத்தின் வரலாறு மிகப் பழைமையானது. சங்க கால இலக்கியங்கள் தமிழர்களின் சமூக அமைப்பு, பண்பாட்டு வாழ்வு, அரசியல் மற்றும் பொருளாதார நிலை குறித்த பல தகவல்களை வழங்குகின்றன. மொழி, இலக்கியம், கலை, மதம், சமூக மரபுகள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாகத் தமிழர் பண்பாடு உருவாகியுள்ளது.

தமிழர்கள் கடல்சார் வணிகத்தில் ஈடு பட்ட சமூகமாகவும் வரலாற்றில் குறிப்பிடப்படுகின்றனர். பண்டைய காலங்களில் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் தமிழர்களுக்கு வணிக மற்றும் பண்பாட்டுத் தொடர்புகள் இருந்தன. ஆனால், தற்போது காணப் படுவது போன்ற உலகளாவிய பரவல் அப்போது இருந்ததாகக் கூறமுடியாது.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில்தான் தமிழர்களின் புலம்பெயர்வு அதிகரித்தது. குறிப்பாக, காலனித்துவ ஆட்சிக் காலத்தில் தொழிலாளர்களாகப் பலர் மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, மோரீஷஸ் போன்ற நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பின்னர், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு காரணங்களால் ஐரோப்பா, அமெரிக்கா, கனடா போன்ற மேற்கு நாடுகளுக்கு தமிழர்கள் குடியேறத் தொடங்கினர். இவ்வாறு பல்வேறு காலங்களில் நடைபெற்ற புலம்பெயர்வு தமிழ்ச் சமூகத்தை உலகளாவிய சமூகமாக மாற்றியது.

புலம்பெயர்வு என்பது வெறும் இடமாற்றம் மட்டுமல்ல; அது ஒரு சமூகத்தின் வாழ்க்கை முறையையும் அடையாளத்தையும் மாற்றும் முக்கியமான செயல்முறையாகும். ஒரு புதிய நாட்டில் குடியேறும் போது அந்தச் சமூகத்தினர் அந்நாட்டு மொழி, கலாசாரம், சட்டம் மற்றும் சமூக அமைப்புகளுடன் இணைந்து வாழ வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இதனால், ஓர் இரட்டை அடையாளம் உருவாகிறது. ஒருபுறம் அவர்கள் தங்களது பாரம்பரிய அடையாளத்தைப் பாதுகாக்க விரும்புகிறார்கள்; மறுபுறம் அவர்கள் வாழும் நாட்டின் சமூகத்துடன் இணைந்து வாழ வேண்டிய தேவையும் உள்ளது.

இந்த நிலையில், புலம்பெயர் தமிழர்கள் பல புதிய சமூக அமைப்புகளை உருவாக்கியுள்ளனர். தமிழ்ப் பள்ளிகள், கலாசார அமைப்புகள், இலக்கியமன்றங்கள், கோயில்கள் மற்றும் சமூக மையங்கள் போன்றவை புலம்பெயர் வாழ்வில் தமிழர் பண்பாட்டைப் பாதுகாக்கும் முக்கியமான தலங்களாக மாறியுள்ளன.

இவற்றின்மூலம் தமிழ் மொழி கற்பித்தல், பாரம்பரியக் கலைகள், திருவிழாக்கள் மற்றும் சமூக நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடை பெறுகின்றன. இதன்மூலம் புலம்பெயர் தமிழர்கள் தங்களுடைய பண்பாட்டு அடையாளத்தை புதிய தலைமுறைக்குப் பரப்ப முயற்சிசெய்கின்றனர்.

தகவல் தொழில்நுட்பப் புரட்சியால் இணையம், சமூக ஊடகங்கள், எண்ம ஊடகங்கள் போன்றவை உலகம் முழுவதும் உள்ள மக்களை

ஒரே தளத்தில் இணைக்கும் சக்தியாக மாறியுள்ளன. இணையத்தின் மூலம் தமிழ் இலக்கியம், செய்தி, கல்வி, கலா சாரம் போன்றவை உலகம் முழுவதும் பரவுகின்றன.

உலகமயமாதல், தொழில்நுட்ப வளர்ச்சியால் ஏற்பட்ட கல்வி, வேலைவாய்ப்பு, நகர மயமாதல் மற்றும் உலகளாவிய தொடர்புகள் ஆகியவை மனிதர்களின் சிந்தனை முறையையும், வாழ்க்கை அணுகுமுறையையும் மாற்றுகின்றன. இந்த மாற்றங்கள் தமிழ்ச் சமூகத்திலும் காணப்படுகின்றன.

பாரம்பரியத் தமிழ்ச் சமூகத்தில் வலுவாக இருந்த குடும்ப அமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நகர வாழ்க்கை, வேலைவாய்ப்பின் தன்மை, தனிநபர் சுதந்திரம் ஆகிய காரணங்களால் சிறு குடும்ப முறை அதிகமாகியுள்ளது. இதனால், தலைமுறைகளுக்கு இடையிலான தொடர்பு குறைவதற்கான வாய்ப்பும் உருவாகியுள்ளது.

எனினும், இந்த மாற்றங்கள் அனைத்தும் எதிர்மறையானவை என்று கூற முடியாது. சிறு குடும்ப அமைப்பு பெண்களின் கல்வி,

வேலைவாய்ப்பை அதிகரித்துள்ளது. பாரம்பரியக் குடும்ப மதிப்புகளையும் நவீன வாழ்க்கை முறையையும் இணைக்கும் ஒரு புதிய குடும்ப கலாசாரம் உருவாகி வருகிறது.

புலம்பெயர்ந்தோர் வாழ்வில் முக்கியத்துவம் பெற்றிருந்த தமிழர் விழாக்களின் வடிவமும் மாறிவருகிறது. பாரம்பரிய முறையில் கொண்டாடப்பட்ட விழாக்கள் இன்று மேடை நிகழ்ச்சிகள், கலாசார நிகழ்வுகள் மற்றும் சமூகக் கூடுகளாக மாறியுள்ளன.

மேலும், வெளிநாடுகளில் வாழும் தமிழர் சமூகத்தில் தலைமுறை மாற்றம் மொழி பரம்பரையைப் பாதிக்கும் முக்கிய காரணமாக மாறியுள்ளது. புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளில் கல்வி மற்றும் சமூக வாழ்க்கை பெரும்பாலும் அந்நாட்டு மொழியிலேயே நடைபெறுகிறது. குழந்தைகள் பள்ளி மற்றும் சமூகச் சூழலில் அந்த மொழியையே அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். இதனால், தமிழ் மொழியைப் பயன்படுத்தும் வாய்ப்புகள் குறைந்து விடுகின்றன.

பல குடும்பங்களில் பெற்றோர் தமிழில் பேசினாலும், குழந்தைகள் பெரும் பாலும் அந்நாட்டு மொழியிலேயே பதிலளிக்கும் நிலை காணப்படுகிறது. இந்த நிலை நீண்ட காலத்தில் மொழிப் பரம்பரையைப் பாதிக்கும் அபாயத்தை ஏற்படுத்துகிறது. இது தமிழ்ச் சமூகத்துக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் புலம்பெயர்ந்து வாழும் பல மொழி சமூகங்களும் எதிர்கொள்ளும் பொதுவான சவாலாகும்.

இதை எதிர்கொள்ளப் புலம்பெயர் தமிழர் சமூகங்கள் பல நாடுகளில் தமிழ்ப் பள்ளிகளை நிறுவியுள்ளன. வார இறுதி நாட்களில் நடைபெறும் இந்தப் பள்ளிகளில் குழந்தைகளுக்குத் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு மற்றும் வரலாறு போன்றவை கற்பிக்கப்படுகின்றன. இருப்பினும், குழந்தைகளின் நேரக் குறைவு, கல்விச் சுமை, தொழில்நுட்பத்தின் கவர்ச்சி போன்ற காரணங்களால் தமிழ்ப் பள்ளிகளில் தொடர்ச்சியான பங்கேற்பு குறைவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இணையவழி பாடங்கள், கைப்பேசி பயன்பாடுகள், எண்ம நூலகங்கள், இணைய வகுப்புகள் போன்றவை தமிழ்மொழி கற்றலை எளிதாக்குகின்றன.

முதல் தலைமுறை புலம்பெயர் தமிழர்கள் தங்கள் சொந்த நாட்டின் பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக இருக்கிறார்கள். இரண்டாம், மூன்றாம் தலைமுறையினர் அந்நாட்டுச் சமூகத்தோடு அதிகமாக இணைந்திருக்கிறார்கள்.

மருத்துவம், பொறியியல், தகவல் தொழில் நுட்பம், வணிகம், ஆராய்ச்சி போன்ற பல துறைகளில் தமிழர்கள் உலக அளவில் சிறந்து விளங்குகின்றனர். இது தமிழ்ச் சமூகத்தின் திறமையையும் கல்வி மீது கொண்ட முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்துகிறது.

பலநாடுகளில் தமிழர் சங்கங்கள் ஆண்டு தோறும் பொங்கல் விழா, தமிழ்ப்புத்தாண்டு, தீபாவளி போன்ற திருவிழாக்களை பொது மக்கள் கலந்து கொள்ளும் வகையில் நடத்துகின்றன. இவ்விழாக்கள் சமூக ஒற்றுமையை வளர்க்கும் நிகழ்வுகளாக மட்டுமல்லாமல், தமிழர் பண்பாட்டை அந்நாட்டு மக்களுக்கும் அறிமுகப்படுத்தும் வாய்ப்பாகவும் அமைகின்றன.

கோயில்கள் சமூக ஒற்றுமையை உருவாக்கும் இடங்களாகவும் செயல்படுகின்றன.பல தலைமுறைகளைச் சேர்ந்த மக்கள் ஒன்று கூடி பண்பாட்டு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பை வழங்குகின்றன.

புலம்பெயர் தமிழர்கள் தாங்கள் வாழும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கும் முக்கியப் பங்களிப்பை வழங்குகின்றனர். பல தொழில்முறை துறைகளில் தமிழர்கள் சிறந்து விளங்குகின்றனர்.

தங்கள் பாரம்பரிய அடையாளத்தைப் பாதுகாக்க முயற்சி செய்யும் நேரத்தில், அவர்கள் வாழும் நாட்டின் சமூகத்தோடு இணைந்து புதிய கலாசார அனுபவங்களைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். இதன் விளைவாக உலகத் தமிழர் என்ற புதிய அடையாளம் உருவாகியுள்ளது. இது ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்புக்குள் மட்டுப்படுத்தப்பட்ட அடையாளம் அல்ல; உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழர்களின் ஒருங்கிணைந்த அடையாளமாகும்.

புலம்பெயர் சூழலில் வளர்கின்ற புதிய தலைமுறையினர், பல்வேறு மொழிகளையும் பண்பாடுகளையும் ஒரே நேரத்தில் அனுபவிக்கின்றனர். இது அவர்களின் உலகப் பார்வையை விரிவாக்கினாலும், சில நேரங்களில் தாய்மொழி மற்றும் பாரம்பரியப் பண் பாட்டுடன் உள்ள தொடர்பைக் குறைக்கும் அபாயமும் உள்ளது. இதைத் தவிர்க்கக் குடும்பம், கல்வி அமைப்புகள் மற்றும் சமூக அமைப்புகள் இணைந்து செயல்பட வேண்டும். பாரம்பரியத்தையும் நவீனத்துவத்தையும் இணைக்கும் ஒரு சமூகமாகத் தமிழர்கள் வளர வேண்டும்.

பாரம்பரியத்தின் வேர்களை உறுதியாகப் பிடித்தபடியே நவீன உலகின் வாய்ப்புகளை ஏற்றுக்கொள்வதே தமிழ்ச் சமூகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு வழிகாட்டும் பாதையாகும். உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழர்கள் ஒன்றிணைந்து செயல்பட்டால், தமிழும் தமிழர் பண்பாடும் உலகளாவிய அளவில் மேலும் வலுவடையும்.

# 2. திருக்குறளின் புகழ்பெற்ற ஐரிஷ் மொழிபெயர்ப்பாளர்

— தமிழ்மைந்தன் ஜான் ரிச்சர்டு

திருக்குறளை ஐரிஷ் மொழியில் மொழிபெயர்த்த புகழ்பெற்ற அயர்லாந்து கவிஞர் காப்ரியல் ரோசன்ஸ்டாக் (Gabriel Rosenstock) இயற்கை எய்தினார்.

நம்முடன் நட்பு பாராட்டிய அவர், அவர் தம் வலைப்பக்கத்தில் வெளியிடும் சில கவிதைகளைத் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கவும் வேண்டுகோள் விடுப்பது வழக்கம். அவருடைய ஐரிஷ் கவிதைகளுக்கான தமிழ் மொழிபெயர்ப்புகளை அவருடைய வலைப்பக்கத்தில் பகிர்ந்து பாராட்டுத் தெரிவிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

*நான் எடுத்த ஒளிப்படத்திற்கு அவர் எழுதிய ஹைக்கூ மற்றும் நான் எழுதிய தமிழ் மொழிபெயர்ப்பு*

காப்ரியல் ரோசன்ஸ்டாக் (29 செப்டம்பர் 1949 — 6 ஏப்ரல் 2026): அயர்லாந்து மண்ணில் இந்திய இலக்கியத்தின் தூதுவர்.

உலகப் புகழ்பெற்ற அயர்லாந்து எழுத்தாளரும், மொழிபெயர்ப்பாளரும், கலை, பண்பாட்டு ஆர்வலருமான காப்ரியல் ரோசன்ஸ்டாக் அவர்களின் மறைவு இலக்கிய உலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அயர்லாந்து மொழியையும் (Irish/Gaeilge), இந்திய மரபுகளையும் தனது எழுத்தால் இணைத்த ஒரு மாபெரும் கலாச்சாரப் பாலமாக அவர் திகழ்ந்தார்.

**பின்னணியும் தொடக்கமும்:**

லிமெரிக் கவுண்டியில் உள்ள கில்ஃபினேனில் பிறந்த ரோசன்ஸ்டாக், ஒரு பன்முக கலாச்சாரப் பின்னணியில் வளர்ந்தவர்.

தந்தை: ஜார்ஜ் (ஜெர்மன் மருத்துவர் மற்றும் எழுத்தாளர்).
தாயார்: அயர்லாந்தின் கால்வே பகுதியைச் சேர்ந்த செவிலியர்.

யூனிவர்சிட்டி கல்லூரி கார்க்கில் (University College Cork) பயின்றபோது, 'Innti' என்ற புகழ்பெற்ற இலக்கிய இதழோடு இணைந்திருந்தார். இதுவே அயர்லாந்து மொழி

கவிதைகளில் ஒரு புதிய புரட்சியை ஏற்படுத்திய நவீன கவிஞர்களின் பிறப்பிடமாக அமைந்தது.

**இலக்கியப் பயணம்:** ஓர் 'ஓய்வற்ற ஆன்மா'

அயர்லாந்தின் கௌரவமிக்க 'ஆஸ்டானா' (Aosdána) அமைப்பின் உறுப்பினரான இவர், 180–க்கும் மேற்பட்ட நூல்களை (சில குறிப்புகளின்படி 400–க்கும் மேற்பட்டவை) படைத்தவர்.

இவரது இலக்கியப் பங்களிப்பு மலைக்க வைக்கக்கூடியது:

பன்முகத் திறன்: கவிஞர், நாடக ஆசிரியர், கட்டுரையாளர் மற்றும் ஹைக்கூ கவிதைகளில் உலகளாவிய நிபுணர்.

மொழிபெயர்ப்பு மேதை: உலகப்புகழ் பெற்ற கவிஞர்களான சீமஸ் ஹீனி முதல் பாப் டிலனின் இசைப் பாடல்கள் வரை அனைத்தையும் அயர்லாந்து மொழியில் கொண்டுவந்தார்.

ஹைக்கூ ஆசிரியர்: வியன்னா மற்றும் ஹைதராபாத் இலக்கிய விழாக்களில் ஹைக்கூ

கவிதைகளை கற்பிக்கும் ஆசானாகத் திகழ்ந்தார்.

**இந்திய மண்ணுடன் ஒரு தீராத பிணைப்பு:**

ரோசன்ஸ்டாக்கின் படைப்புகளில் இந்தியா ஒரு முக்கிய மையப்புள்ளியாக இருந்தது. ஐரோப்பிய மற்றும் இந்திய கலாச்சாரங்கள் ஒரே வேரிலிருந்து உருவானவை என்ற ஆழமான நம்பிக்கையைக் கொண்டிருந்தார்.

"இந்தியாவின் ஆன்மீகமும் அயர்லாந்தின் மொழியும் எனது இரு கண்கள்." என்று பெருமிதம் கொள்வார்.

**முக்கிய இந்தியப் பங்களிப்புகள்:**

தாகூர் மற்றும் இக்பால்: ரவீந்திரநாத் தாகூர் மற்றும் முஹம்மது இக்பால் ஆகியோரின் படைப்புகளை அயர்லாந்து மொழிக்குக் கொண்டு சென்றார்.

காந்தியச் சிந்தனை: 2019–ல் காந்தியின் 150–வது பிறந்தநாளை முன்னிட்டு 'Walk with Gandhi' என்ற நூலை வெளியிட்டார்.

திருக்குறள்: டப்ளின் ட்ரினிட்டி கல்லூரி மற்றும் அயர்லாந்து தமிழ்க் கல்விக்கழக ஒத்துழைப்பில் 2023–ஆம் ஆண்டு உலகப் பொதுமறையான திருக்குறளை அயர்லாந்து மொழியில் (An Thirukkural as Gaeilge) மொழிபெயர்த்து டப்ளின் ட்ரினிட்டி கல்லூரியில் வெளியிட்டார்.

*அவருடன் நான்*

கவிதைத் தொகுப்பு: 2025–ல் 'இந்தியாவின் ஒளிமயமான நிழலில்' (Faoi Scáil Gheal na hIndia) என்ற தனது கவிதை நூலை அர்ப்பணித்தார்.

**அழியாத மரபு:**

ரோசன்ஸ்டாக் ஒரு 'செல்டிக் பௌத்த' (Celtic Buddhist) வம்சாவளி தாரகராகவும் அறியப்பட்டார். இந்திய, ஜப்பானிய மற்றும் உலக இலக்கியங்களின் செழுமையை அயர்லாந்து மொழிக்குக் கொண்டு வந்த அதே வேளையில், அயர்லாந்தின் அடையாளத்தை உலகெங்கும் கொண்டு சென்றார்.

மொழிகள் வேறுபட்டாலும் மனித உணர்வுகளும் ஆன்மீகமும் ஒன்றே என்பதைத் தனது வாழ்நாள் முழுவதும் நிரூபித்த அந்தப் பெரும் கவிஞரின் புகழ் அவர் விட்டுச் சென்ற எழுத்துக்களில் என்றும் நிலைத்திருக்கும்.

# 3. கணக்கு, அறிவு

— அருள் மெர்வின்

உதாரணமாக, இதை நான் எழுதும் போது மணி 9:40. சின்ன முள் ஒன்பதுக்கும் பத்துக்கும் இடையே இருக்கிறது. ஆனாலும், அதை 9 என்றுதான் சொல்ல வேண்டும். பெரிய முள்? அது 8–இல் இருக்கிறது. ஆனாலும், மணி 'ஒன்பது : எட்டு' என்று சொல்ல முடியாது. எட்டை ஐந்தால் பெருக்கி (8x5) நாற்பது என்று சொல்ல வேண்டும். ஒன்பது : நாற்பது. ஒருவேளை, பெரிய முள் 8–க்கும் 9–க்கும் இடையே இருந்தால் இந்த கணக்கு இன்னும் சிக்கலாகும். பெருக்கிவிட்டுக் கூட்ட வேண்டும். 9:(8x5)+2 = 9:42

முட்கடிகாரத்தைப் பார்த்து மணி சொல்வது என்பது ஐஏஎஸ் கேள்விகளுக்குப் பதில் சொல்வதற்கு இணையானது. முட்கடிகாரத்தைப் பார்த்து மணி சொல்லத்தெரியும் எல்லா மூளைகளுக்கும் எத்தகைய லாஜிக், கணக்கு சம்பந்தமான கேள்விகளுக்கும் பதில் சொல்லும் திறன் இருக்கிறது. அதை இது போன்ற வேறு விஷயங்களுக்குப் பழக்கப்படுத்தவில்லை

என்பதுதான் வெற்றி பெறுபவர்களுக்கும் பெறாதவர்களுக்கும் இடையேயான வித்தியாசம்.

எலக்ட்ரானிக் கடிகாரங்கள், செல்போன் கடிகாரங்கள் வந்தபின் இது எளிதாகிவிட்டது என்று நினைக்க வேண்டாம். செல்போன் 9:15 என்று ஓர் எண்ணைக் காண்பிக்கும். நாம் அதைப் பார்த்துவிட்டு 'ஒன்பதே கால்' என்போம். இதைக் கேட்பவரின் மூளை கால், அரை, முக்கால் போன்ற பின்னங்களை மூளைக்குள் செயலாக்கம் செய்து, அறுபதை நான்கால் வகுத்து கால் என்பது 15 என்று புரிந்து கொள்ள வேண்டும். இது இயற்கையால் வந்த திறன் அல்ல. கற்றலால் வந்த திறன். பள்ளிக்கூடம் பக்கமே தலைவைத்துப் படுத்திருக்காதவர்களுக்கு, மணி பார்க்கக் கற்றுக் கொள்ளாதவர்களுக்கு – அதாவது கடிகாரத்தின் அடிப்படை கணிதம் கற்காதவர்களுக்கு – இது இயல்பாக வராது. நீ என்ன கடிகாரத்தைப் பார்த்து மணி சொல்கிறாய், என் தாத்தா சூரியனைப் பார்த்தே மணி சொல்வார் என்பதெல்லாம் பெருமையல்ல. சூரியனைப் பார்த்து மணி சொல்வதைவிட கடிகாரத்தைப் பார்த்து மணி சொல்வது கடினமானது. முன்னது அனுபவம், பின்னது

கல்வி. கல்வியின் அட்வான்டேஜ் அதைக் கற்றுக்கொள்ள எல்லோராலும் முடியும்.

ஜெர்மன் மொழியில் நேரத்தைப் பேச்சு வழக்கில் எப்படிச் சொல்கிறார்கள் என்பது என்னை மிகவும் ஆச்சரியப்படுத்தியது. குறைந்த பட்சம் ஐன்ஸ்டைன் அளவு மூளையில்லாவிட்டால் ஜெர்மன் மொழியில் மணி சொல்வதைப் புரிந்து கொள்ள சாத்தியமில்லை.

8:30—ஐ ஒன்பதாக இன்னும் முப்பது நிமிடங்கள் என்கிறார்கள்.

8:25—ஐ ஒன்பதாக இன்னும் முப்பது நிமிடங்கள் ஆவதற்கு முன் ஐந்து நிமிடங்கள் என்கிறார்கள்.

8:35—ஐ ஒன்பதாக இன்னும் முப்பது நிமிடங்கள் ஆவதற்குப் பின் ஐந்து நிமிடங்கள் என்கிறார்கள்.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கண்ணகியின் திருமண வயதை, "ஈர்ஆறு ஆண்டு" என்கிறார். கோவலனின் வயதை, "ஈர்எட்டு ஆண்டு" என்கிறார். மாதவி "ஏழ் ஆண்டு இயற்றி (பயிற்சி செய்து)" "ஓர் ஈர் ஆறு ஆண்டில்" ஆடினாள் என்கிறார்.

கண்ணகி மதுரையையெல்லாம் எரித்து முடித்தபின் அவளைப் பார்த்த சம்பவத்தைக் குறவர்கள் சேர மன்னனிடம் சொல்லும் போது அவனை, “பல்நூறு ஆயிரத்து ஆண்டு” வாழ்க என்கிறார்கள். சிலப்பதிகாரத்தின் கடைசி சேப்டரில் மாலதி–பாசண்டன்–தேவந்தி கதை வருகிறது. இந்த விநோத கதை பலபேருக்குத் தெரியாததல்ல என்பதல்ல விஷயம். இவர்கள் “நால்ஈர் ஆண்டு” திருமணம் செய்து வாழ்ந்தார்கள் என்கிறார் இளங்கோ.

பாரியின் பெண்பிள்ளைகளுக்கு அடைக்கலம் தேடிக் கூட்டிச் சென்ற கபிலர் இருங்கோவேளைச் சந்திக்கிறார் (புறநானூறு 201). அவனிடம், “யானே தந்தை தோழன்” என்று தன்னை அறிமுகப்படுத்துகிறார். அதாவது, “நான் இந்த பெண்பிள்ளைகளின் தந்தையின் தோழன்”, என்கிறார். அடுத்து, அந்த பெண் பிள்ளைகளை அறிமுகப்படுத்துகிறார், “இவர் என் மகளிர்”, என்று. அதாவது, பாரியின் பிள்ளைகளைத் தன் பிள்ளைகள் என்று. அடுத்து, இருங்கோவேளைப் பார்த்து, “நாற்பத்தொன்பது வழிமுறை வந்த வேளிருள் வேளே” என்கிறார். சங்க காலத்திலும் 49 நாற்பத்தொன்பது. நான்கு x பத்து + ஒன்பது = நாற்பத்தொன்பது.

# 4. மொழியில் இயங்கியல்

— ஜனா

ஆரம்ப காலங்களில் செயலின் கட்டளைகளாக அல்லது வினைச்சொல்லாக மட்டுமே மொழி இருந்தது. பின்னர் அது இடம் விட்டு இடம் செல்லும் பொழுது, பிராந்திய நிலை நிலவியல் மற்றும் தட்பவெட்ப நிலைகளுக்கு தகுந்தாற்போல் சிற்சில ஒலி மாற்றங்களைக்கொண்டது. இந்த மாற்றங்கள் அனைத்துமே மொழியின் படிநிலை வளர்ச்சி என்று கொண்டால், அது இயக்கவியலின் விதிகளின்படியே செயல்படுகிறது. நாம் இன்றளவும் பலமொழி குடும்பங்களின் ஒப்பீடுகளையும் அதன் ஆராய்ச்சிகளையும் கண்டு வருகிறோம். அதன் உச்சரிப்பு மற்றும் அதன் பொருள் ஆகியவற்றை கொண்டு கூடியவரை ஒத்தவைகளை வைத்து மொழிக்குடும்பங்களாக பிரிக்கிறோம். மொழிகளின் ஆராய்ச்சியில் ஒரு உன்னத கண்டுபிடிப்பு என்பது மொழிகளின் ஒருமைப்பண்பை கொண்டு அதனை குடும்பமாக பிரிப்பது. மொழி என்பது அரசியல் பின்புலத்தில்

எவ்வளவு முக்கியமான ஒன்று என்பதை நாம் நன்றாக அறிவோம்.

ஆங்கிலேயர் வருகையும், அதற்கு முன்னரே போர்ச்சுகீசிய வருகையில் இந்திய மொழிகளில் மேல் ஈர்ப்பு கொண்டு, அதனை கற்றுக்கொண்டு ஆராயும் விருப்பமுள்ள பல சமய பாதிரியார்கள் இருந்தனர். ஆனால் அவர்களின் விருப்பம் சமஸ்கிருதமாக இருந்தது. மதத்தைக்கடந்த மொழி ஆர்வமாக அது இருந்தது என்றாலும் இந்திய இனத்தை அவர்கள் பைபிளில் புராணவம்சத்தோடு இணைக்க முயற்சிகள் நடந்தனவே. சமஸ்கிருத மொழியின் இலக்கணத்தை ஃபாதர் ஹாங்க்ஸ்லீடன் தொகுத்தார். அதேபோல் ஃபாதர் கோயர்டோக்ஸ் சமஸ்கிருதம் மற்றும் ஐரோப்பிய மொழிகளின் இடையே உள்ள ஒப்பீட்டை வைத்து இந்த மொழியின் நெருங்கிய உறவை முதலில் உணர்ந்தார். ஆனால் இதுவரையிலும் அவர்கள் யாருக்கும் தெரியாத ஒரு மாபெரும் பனிப்பாறையின் உச்சிநுனி மட்டுமே இந்தியா. இந்தியா என்ற ஒரு தேசம் விந்தையிலும் விந்தையானது. இந்த உலகில் இல்லாத அனைத்து வேற்றுமைகளையும் கொண்டது. மொழி இனம் தட்பவெட்பம் உணவு உடை

பண்பாடு தெய்வங்கள் மற்றும் சடங்குகள் அனைத்து கூறுகளும் இயங்கிக்கொண்டே இருப்பவை மேலும் மேலும் மாறுபாடுகளை கொண்டதாக இருக்கிறது. இவை அனைத்திலும் நாம் ஒருமை தன்மையை கண்டறிய நினைத்தால் அது, தேசம் மதம் பண்பாடு ஆகியவற்றைக் கடந்த ஒரு சாரம்சமாக இருக்கும் அல்லது அப்படி ஒன்று இல்லாமல் கூட போகலாம். எது எப்படியோ நாம் இங்கு மொழியின் வரலாற்றை, ஒரு சிறிய பெட்டிக்குள் வைத்து பார்க்க முயற்சி செய்வோம்.

நம்மால் உலகில் உள்ள மொழிகளையோ மொழிக்குடும்பங்களையோ ஆராய்ந்து அதில் எந்த விடயமும் விரைவாக காண இயலாது. ஆனால் நாம் பிறந்த மண்ணில் உள்ள தனித்தன்மையான தமிழ்மொழியும் மற்ற மொழியான ஆங்கிலேயர்களை அதிகம் கவர்ந்த மொழியான சமஸ்கிருதத்தையும் பற்றியும் வரலாற்று ஆய்வை மேற்கொள்ளலாம். ஒரு மொழியின் குறியீடுகள் என்பது வேறொரு (இணை) மொழியின் அடிப்படையை கொண்டு ஆராயப்படலாம். ஆனால் பல மொழிகள் மொழி குடும்பங்களில் வழங்கொழிந்து போனது அதன் உச்சரிப்புகள் சரியாக வகைப்படுத்தப்படாமல்

போனதால்தான். நாம் இன்னும் கடந்து போவதற்கு முன் என்னுடைய ஒரு கருத்தை தெளிவாக்குகிறேன். எந்த ஒரு மொழியும் மாறாத்தன்மையும், மாற்றத்தை ஏற்காத்தன்மையும் கொண்டிருக்கிறது என்றால், அது அழியாத்தன்மையை இழக்கும். மாற்றம் ஒன்றுதான் அழிவிலிருந்து மீட்கும் சக்தி கொண்டது. இது மொழி மதம் தேசம் இனம் என்ற எல்லாவற்றிலும் பொதுவான விதியாகும். நாம் இவ்வுண்மையை உணரும்போதுதான், பல நிதர்சனங்கள் நம் கண்முன்னே தெளிவாகத்தெரியும். இன்றும் பலர் மொழிகளை தங்கள் இரு கண்கள் என புலமை மனப்பாங்கொடு சொல்வதைக் கேட்கிறோம்.

ஒரு மொழியின் அடிப்படை ஆதாரம் என்பது என்ன? ஒரு மொழி அழியாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்? இது போன்ற கேள்விகள் நம் முன்னே உள்ளது. இதை நன்கறிய நாம் வரலாற்றை சற்று பின்னோக்கிப் பார்த்தாலே போதுமானது. அதில் இக்கேள்விக்கான பதிலை நாம் அடையலாம். ஒரு மொழியை காக்க பல இலக்கியங்கள் உருவாக்கினால் அதன் அழிவிலிருந்து காக்கலாம் அல்லவா! ஒரு மொழியில் பல அறிஞர் பெருமக்கள் தங்கள்

ஆழ்ந்தகன்ற கருத்துக்களாலும், தத்துவங்களாலும், தோற்றுவிக்கும் கோட்பாடுகள் இலக்கியங்கள் அந்த மொழிக்கு வலுசேர்க்காமலா போகும். இது மிகச்சரியானதாகவே நமக்கு தோன்றுகிறது. கிரேக்க காவியங்கள், கிரேக்க நாடகங்கள் நமக்கு சொல்லாத விஷயங்களே இல்லை அல்லவா! சமஸ்கிருதத்தில் உள்ள புராணங்களும் அதன் கருத்துக்களும் எண்ணற்றவை, அவற்றை விரல்கொண்டு எண்ண முடியாது. எகிப்திய நாகரீகம் மிகப் பழமையானது இருந்தாலும் அதன் மொழிகள் வழங்கொழிந்தன என்றே நாம் பார்க்கிறோம். இயேசு காலத்தில் பேசப்பட்ட அரமைக் மொழி கூட பெரும்பாலும் வழங்கொழிந்து போனது. அவை இன்று அசிரியன்–அரமைக் மற்றும் ஹீப்ரு மொழிகளில் காணலாம். ஏன் எதனால் இலக்கியம் அந்த மொழியை காக்க தவறியது? மீண்டும் நாம் அடிப்படை புரிதலுக்கு வருவோம். ஒரு கூறு அதன் அழியாநிலையை அடைய அது மாற்றம் என்ற ஒன்றை ஏற்க வேண்டும். மாற்றத்தை ஏற்க, உற்பத்தி உறவில் ஈடுபட வேண்டும். சமுதாய உற்பத்தியில் அல்லது உற்பத்தி உறவுகளில் தொடர்பில்லாத எதுவும் மாற்றத்திற்கு உட்படாது. அதனால் அது அழிந்து

போவது தான் இயற்கையின் தேர்வு. நாம் காணும் அத்தனை மொழிகளும் வணிகத்தில் சம்பந்தப்பட்டதா? சாதாரண கடைக்கோடி மனிதனின் அன்றாட வாழ்க்கையில் பயன்பட்டதா? என்ற கூறுகளே மொழியின் அழியாத தன்மையை முடிவெடுக்கும். ஒரு மொழி மனிதர்களால் பேசப்படவில்லை எனில் அதன் இருப்பு என்பது எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது. இடம் தொழில் காலம் ஆகியவற்றில் வரும் மாற்றத்தை மொழி ஏற்றாக வேண்டும். வளர்ச்சியடைய வேண்டும். நாம் ஓரளவுக்கு இயக்கவியல் சார்ந்த விதிகளை மொழியின் ஊடே செலுத்தி அதை காண விழைகிறோம். ஓரளவு வெற்றியும் பெற்றோம் என்று நினைக்கிறேன்.

ஒரு மொழியை மக்கள் கற்று பயன்பெற அதன் உற்பத்தி மற்றும் பொருளாதார நோக்கமே ஆதாரமாக உள்ளது. அமெரிக்காவின் ஆட்சி மொழியாக உள்ள ஆங்கிலத்தின் வரலாறு தனித்தன்மையானது. அமெரிக்கா அதன் ஆட்சி மொழி வாக்கெடுப்பில் ஜெர்மன் மொழி தோற்றது. ரஷ்யாவின் மன்னர் ஆட்சியில் ஐரோப்பிய மொழிகள் அதிக பெருமையும் சிறப்பும் பெற்றிருந்தன. என்றாலும் சாதாரண

மக்களின் வாழ்க்கையில் உபயோகம் எதுவோ அதுவே நிதர்சனமான தேசத்தின் மொழியாகும். மொழிகளால் தேசங்கள் துண்டாடப்படுகின்றன, மாநிலங்கள் பிரிக்கப்படுகின்றன, மனிதர்கள் இடங்கள் இனங்கள் இவை அனைத்தையும் பிரிக்கும் கருவியாக மட்டுமே மொழிகள் இருப்பதில்லை. மொழிகளின் செயல்முரண் இதுவே பிரிப்பதே சேர்க்கும், இதையும் நாம் இயக்கவியலிலேயே காண முடிகிறது.

மொழி மற்றும் பண்பாடுகள் தன் இடநிலையை பரவச் செய்ய வணிகத்தையே நம்பி இருக்கின்றன. ஆங்கிலமொழி கூட இந்தியாவிற்கு வணிகத்திற்காகவே வந்தது. தமிழ் மொழியின் பரவல் கிழக்கு ஆசியாவில் வணிகர்கள் மூலமாகவே நடந்தது. மொழி மதம் மற்றும் பண்பாடுகளை பல நாடுகள் அறிவதற்கு வணிகமே மிகச் சிறந்த கருவியாகும். வரலாற்று ஆசிரியரின் பிரயாண கட்டுரைகள் ஒரு குறிப்பிட்ட இடத்தையும் காலத்தையும் மட்டுமே தெரிவிக்கிறது. ஆனால் இவர்களின் எல்லா அனுபவங்களும் தன்தேசத்தின் கடைநிலை மனிதன்வரை சென்று சேருமா என்பது ஐயமே. ஆனால் ஊர்ஊராக சென்று உப்பு விற்கும் உமணன் மூலம், அயல் பிரதேசத்தின்

நிகழ்வுகளை நன்றாக பரவச் செய்யமுடியும். பெளத்தமதம் தன் நிலவியல் பரப்பை அதிகப்படுத்த வணிகத்தினரே பெரும்பங்கு ஆற்றினர். சங்கம் வைத்து தமிழ் வளர்த்த தமிழ்மன்னர்கள் பற்றி நாம் நிறைய கேட்டதுண்டு. நாம் எடுக்கும் நிலை என்னவென்று இதுவரை நாம் மேலே சொன்னதிலிருந்து சிந்தித்துப் பார்த்தால் சங்கம் வைத்து இலக்கியங்கள் செய்யப்பட்டன என்றாலும் அது மொழியின் வளமை மற்றும் அழியாத்தன்மையை கொடுக்குமா? பானை செய்யும் மக்கள் தன் பெயரை பானையில் பொரிப்பதும் சாதாரண ஊர் மக்கள் வெட்டிய கல்வெட்டுகள் போன்றவை நாடாளும் அரசனின் தமிழ்சங்கத்தின் பிரதிபலிப்பானால் அது இன்று வரை உள்ள தமிழ் பரவலை தகவமைக்க மூல காரணமாக ஆவதில்லை. இந்தியாவின் மொழிகளை பிரச்சாரம் செய்யவும் அதை தென்னிந்தியாவின் பரவச் செய்யவும் சபைகள் தோற்றுவிக்கப்பட்டன இதை நான் நன்கு அறிவோம். இதனால் மக்களிடம் அதனை எழுதவும் படிக்கவும் அறிவு தோன்றியது உண்மையே. ஆனால் சரளமாக பேச முடியுமா? என்ற கேள்விக்கு விடை நாம் அறிந்ததே. அங்கு தேவை என்ற ஒன்று முன்னிலை வகிக்கிறது.

பேச வாய்ப்புகள் இருந்தால் அந்த மொழி நடைமுறையில் மக்களிடம் புழங்கும். இன்றளவும் எழுத்து வடிவம் இல்லாத மொழிகள் நம் நாட்டில் பல உள்ளன. அவைகள் தன் இறுதிக்கட்ட நிலையில் ஒரு குடும்பத்தில் பேசக்கூடிய மொழியாக உள்ளது. இந்த மொழிகளுக்கு எழுத்து வடிவமும் புத்துயிரும் கொடுக்க எத்தனையோ முயற்சிகள் செய்யப்படுகின்றன. அது தன் வலிமையை வணிகம் மற்றும் சமூக உற்பத்தியில் தன்னை இணைக்காவிடில் அதன் அழிவின்மை என்பது கேள்விக்குறியே.

சமஸ்கிருதம் என்ற மொழியின் பெயர் ரிக்வேத காலத்தில் இல்லை. அதற்கு எழுத்து வடிவம் இல்லை. அது ஒலிவடிவம் மட்டுமே கொண்டது. தலைமுறை தலைமுறையாக மூவாயிரத்தி ஐநூறு ஆண்டுகளுக்கு மேலாக இன்றும் தொடர்ந்து வருவதற்கு அது ஒலிவடிவில் இருந்ததே காரணம். ஒலிவடிவத்தில் சிறப்பு அதன் மாற்றத்தை தடுக்கும். மற்றும் அதன் தன்மையை கூடியவரை மாறாமல் வைக்கும். இருந்தும் மாற்றம் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. பாடபேதம், பலதரப்பட்ட சாகைகள் இவை எல்லாம் மாற்றங்களே. ஆனால் இவை எதுவுமே ஒரு மொழியின் மாற்றங்கள் அல்ல. இவை அந்த

கவிதைகளின் உச்சரிப்பில் வந்த மாற்றங்கள். சொல்லும் ராகங்களில் வந்த மாற்றங்கள். கவிதைகளின் தொகுப்பில் வந்த வரிசை பட்டியலில் மாற்றங்கள். மொழிகளில் மாற்றம் இது இல்லை என்றால், அவை சகமனிதர்களின் பயன்பாட்டிற்கு தோன்றியவைகளாக அவையில்லை.

ரிக்வேத ரிஷிகள் மற்றும் தேவர்களிடையே நடக்கும் கவிதைத்தனமான வேண்டல்கள் மற்றும் போற்றல்கள், ஒன்பது மண்டலங்கள் முழுவதும் ரிக்வேதத்தில் உள்ளது. பத்தாவது மண்டலத்தில் நாம் சிறிது அந்த சமூக காலத்தின் பிற்பகுதியில் உள்ள கூறுகளை தெரிந்து கொள்ள முடிகிறது. அங்கே நிச்சயமாக மொழியின் ஆளுகை விரிவதனால் புதிய சொற்கள், திறம்படுத்தப்பட்ட சொற்கள் உருவாவது சாத்தியமே.

பல மொழியறிஞர்கள் ரிக் வேதத்தின் 9 மண்டலங்களில் உள்ள மொழி ஆளுமைக்கும் பத்தாவது மண்டலத்தில் உள்ள மொழி ஆளுமைக்கும் உள்ள வேற்றுமையை கண்டறிந்தனர் அது மட்டும் இல்லாமல் இந்த இரண்டு மொழிகளுக்கும் இடைப்பட்ட காலம்

குறைந்தது 300 லிருந்து 500 ஆண்டுகள் இருக்கும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மொழியியல் மாற்றத்திற்கு காரணமாக அமைந்தது சிந்து சமவெளியில் ரிக்வேதகால ஆரியர்கள் சிந்துசமவெளி மக்களுடன் கொண்ட தொடர்பு ஆகும். ரெட்ரோஃப்ளெக்ஸ், செரிப்ரல் மெய்யெழுத்துக்கள் (பின் வளைவு கொண்டவை ட் ண் ள் ழ் இந்த உச்சரிப்புகள்) சிந்து சமவெளி மக்களுடன் கொண்ட தொடர்பினால் ஏற்பட்டவையாகும். மொழியியல் ரீதியில் இந்த பின்வளைவு உச்சரிப்புகள் அதிகமாக பயன்படுத்தப்படுவது திராவிட மொழியில் குறிப்பாக தமிழ் மொழியில்.

பிராக்கிருத மொழிகளின் வடிவமைப்பில் நாம் காணுவது அனைத்தும் சமஸ்கிருதத்தில் இருக்கலாம் ஏனெனில் பிராகிருதமும் அர்த்தமாகதியும் நடைமுறையில் மக்கள் பேசிய மொழியாகவே இருந்தது. இதன் நன்கு மேம்படுத்தப்பட்ட வடிவமாக சமஸ்கிருதம் ஆகலாமே தவிர. சமஸ்கிருதத்தின் பிராந்திய மொழியாக மற்ற மொழிகளை கொள்ளல் என்பது விவாதத்திற்குரிய ஒன்றாகும். மொழியும் அதன் புதிய சொற்களும் இயக்கம் உள்ளவையாக இருத்தல் வேண்டும். அதற்கு அந்த மொழியானது

தேசங்களை கடந்து கடல்கடந்து பலநாடுகளில் சென்று பேச்சுமொழியாக இருத்தல் வேண்டும். அப்படி அவை ஆகும்பொழுது அங்குள்ள புதிய சொற்களையும் சொல்லாடல்களையும் தனது மொழியில் ஏற்றுக்கொண்டு அதற்கு இணையான சொற்களை உருவாக்கும் தன்மை ஒரு மொழிக்கு வேண்டும்.

இன்று நாம் உபயோகிக்கும் பல விஞ்ஞான சாதனங்களின் சொற்கள் தமிழில் உருவாக்கப்பட்டுள்ளன. இருந்தாலும் இதில் நம்மை விட முன்னேறி இருக்கும் மொழி சீனமே ஆகும். சாணக்கியர் காலத்தில் அர்த்தசாஸ்திரம் போன்ற நூல்களில் புதிய சொற்கள் உருவாக்கபட்டே ஆகவேண்டிய கட்டாயம் இருந்தது. பாணினி சமஸ்கிருத இலக்கணம் என்பது அந்தமொழி இயக்கத்திற்கு உள்ளானதையே குறிக்கிறது. இதுபோலவே நமது திராவிடமொழி குடும்பத்தில் உள்ள மொழிகளிலும் நடந்தது, நடந்தும் கொண்டிருக்கிறது. ஒரு மொழியின் பறந்து விரிந்த விசாலத்தன்மை அது பல மொழி வார்த்தைகளை மற்றும் சொல்லாடல்களை ஒரு பொதுவான வகையில் உபயோகிக்கும்

முறையை நம் தொல்காப்பியம் பின்வருமாறு கூறுகிறது.

*“வடசொல் கிளவி வட எழுத்து ஒரீஇ*
*எழுத்தொடு புணர்ந்த சொல் ஆகும்மே”*
(தொல்காப்பியம். சொல்லதிகாரம். எச்சவியல்).

தொல்காப்பியத்தில் வடமொழி சொற்களை (வடசொல்) கையாள்வது தொடர்பாக மிகவும் தெளிவான மற்றும் நுட்பமான இலக்கண விதிகள் கூறப்பட்டுள்ளன. தொல்காப்பியர் வடசொற்களை தமிழில் பயன்படுத்த அனுமதித்தாலும், அவற்றை தமிழ் மரபுக்கு ஏற்ப மாற்றியே பயன்படுத்த வேண்டும் என்றார். தொல்காப்பியர் சொற்களை நான்கு வகையாகப் பிரித்ததில் (இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல்), வடமொழிச் சொற்களை "வடசொல்" எனக் குறிப்பிடுகிறார். வடசொற்களைத் தமிழில் எழுதும்போது, தமிழில் இல்லாத வடமொழி எழுத்துக்களை (உதாரணமாக: ஷ, ஸ, ஜ, ஹ, க்ஷ) தவிர்த்து எழுத வேண்டும்.

வடசொற்கள் தமிழில் வரும்போது, தமிழ் எழுத்துக்களாலும், தமிழ் ஒலிப்பு முறையாலும் புணர்ந்து வரவேண்டும். அதாவது,

வடமொழியின் ஒலிப்பு முறை அப்படியே தமிழில் இருக்கக்கூடாது. தொல்காப்பியர் காலத்தில் வடமொழி (சமஸ்கிருதம்) செல்வாக்கு பெறத்தொடங்கியதால், தமிழோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த அம்மொழிச் சொற்களை எப்படிக் கையாள வேண்டும் என்று அவர் வரன்முறை செய்துள்ளார். மணிப்பிரவாளநடை போன்ற மொழியியல் மாற்றங்கள் கிபி ஒன்பதாம் நூற்றாண்டில் தொடங்கியது. இது தொல்காப்பிய இலக்கணத்திற்கு உட்படாத ஒரு முறையாகும்.

மனிதனைப் போலவே மொழியும் தன் தோற்றம் என்பது எங்கு தொடங்கியது என்று அறுதியிட்டு சொல்லுதல் இயலாது. ஏனெனில் இயக்கமும் இடம்பெயர்வும் தான் மனித இனத்தை இவ்வளவு தூரம் முன்னேற்றிருக்கிறது. இடப்பெயர்வு என்பது அனைத்து மதப்புராணங்களில் உள்ள பொதுத்தன்மையாக உள்ளது. மனிதனின் மொழியின் படிநிலை வளர்ச்சிகள் பற்றிய யாதொரு பதிவும் புராணங்களில் இருப்பதுபோல் தெரிவதில்லை. ஏனெனில் படிநிலை வளர்ச்சி என்ற ஒன்றையே மதங்கள் ஏற்றுக் கொண்டதாக தெரியவில்லை. ஆனால் ஹெகலின் இயக்கவியலை விட டார்வின் பரிணாம தத்துவமே மதத்தின் மேல்விழுந்த ஆகப்பெரும்

அடியாகும். தமிழ் மொழியில் உள்ள “கல்தோன்றி மண்தோன்றா காலத்தே” என்ற சொற்றொடர் படிநிலை வளர்ச்சியை ஏற்க்காத ஒரு சிந்தனை. இதை முதல் திணையில் உருவான மொழி என்று ஏற்கவேண்டியுள்ளது. முதல் திணையான குறிஞ்சியில் சங்கம் இல்லை மன்னன் என்பவன் தோன்றியது மருத நிலத்தில்தான். சங்கம் என்பது ஆதிக்குடி இனக்குழுக்களில் இருந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. இதிலிருந்து ஒரு மொழியை சங்கம் வைத்து வளர்க்கமுடியாது என்பது திண்ணமாகிறது. இந்த மொழி இங்குதான் புழங்கிற்று என்றும் கூற இயலாது. வரலாற்றில் மொழியின் பங்கு மன்னர்களால் தழைத்தோங்கியது என்ற எண்ணம் எந்த வகையிலும் மொழியையும் மரபையும் சரியான நிலைக்கு கொண்டு சேர்க்காது.

சிந்துவெளி மக்கள் மொழி என்ன என்று ஆராய்ச்சியில் கிடைத்த குறியீட்டு முத்திரைகள், வரலாற்று குறிப்புகள் மற்றும் ரிக்வேத குறிப்புகள், தமிழகத்தில் நடந்த தொல்பொருள் ஆராய்வுகள் மூலம் ஒருமுகப்பட்ட ஆராய்ச்சி முடிவுகள் வருங்காலத்தில் இன்னும் பல செய்திகளை தரலாம். நமது கீழடியில் கிடைத்த பானை ஓட்டு குறியீடுகள் சிந்து சமவெளி

குறியீடுகளுடனும் ஒத்திருக்கின்றன. இதை நாம் திராவிட மொழிக்குடும்பம் என்று சொல்வதே சாலச்சிறந்தது. ஆனால் நாம் ஒரு நிதர்சனத்தை கருத்தில் கொள்ள வேண்டி உள்ளது. வரிவடிவங்கள் படிக்கும் பொழுது அதில் ஏற்படும் உச்சரிப்பு அர்த்தப்பிழை இவை அனைத்தையும் கடந்த பல ஆயிரம் ஆண்டு முன்னர் உள்ள வரிவடிவம் குறியீடுகளை படித்தல் என்பதில் உள்ள உழைப்பும் அதன் அர்த்தம் புரிதலும் அளப்பரிய ஒன்றாக கருத வேண்டும். மனிதனின் மாபெரும் திறமைகளில் ஒன்றாக இதை காண வேண்டும். ஒரே வரி வடிவம் கொண்ட பல மொழிகள் மற்றும் வரிவடிவங்களில் இருக்கும் படிநிலை வளர்ச்சியும், இடத்திற்கான மாறுபாடுகளையும் கருத்தில் கொண்டு செய்யப்படும் ஆய்வுகள் மாபெரும் சாதனையாகும்.

ஒரே வரிவடிவம் கொண்டு வெவ்வேறு மொழிகளை கொண்ட கல்வெட்டுகள் மற்றும் அதன் மொழியியல் ஆய்வுகளை அடுத்து வரும் ஒரு ஆய்வு கட்டுரையில் காணலாம்.

# 5. மதுரை: இன்றும் அன்றும் – 1

— முனைவர் ப. பாண்டியராஜா

நான் படித்து, பணியாற்றிய மதுரை அமெரிக்கன் கல்லூரி கோரிப்பாளையம் பகுதியில் உள்ளது. அதன் முன்பகுதி மிக அகலமானது. இடப்பக்க ஓரம் பனகல் சாலை சந்திப்பு (Collector's office Road). இன்றைய தேவர் சிலை சந்திப்பு. வலப்பக்க ஓரம் தமுக்கம் சந்திப்பு (தந்தி ஆபீஸ்). இன்றைய நேரு சிலை சந்திப்பு. அந்த இரு சந்திப்புகளுக்கு இடையே இருந்த சாலை மிக அகலமானது.

'இருந்த' என்கிறேன். ஏனெனில் பின்னர் அது நடுவில் நீண்ட மதில் அமைத்து இரு பாகங்களாகப் பிரிக்கப்பட்டது. இப்போது அதில் ஒரு மேம்பாலமும் கட்டப்பட்டு, முகப்புப் பகுதி அத்தனையும் பாழ்.

அன்றைக்கு இருந்த அந்த மிக அழகிய, அகலமான சாலை பார்க்கப் பார்க்க மிக அழகாக இருக்கும். திடீரென்று அந்தச் சாலையில் 'டப டப டப டப' என்று மிக மிக உரத்த சத்தம் கேட்கும்.

அந்தப் பகுதியே அலறுகின்ற வகையில் அந்த ஒலி எழுப்பப்படும்.

நாங்கள் சொல்லிக்கொள்வோம் “கலைக்டர் மகன் போறான்”.

ஆம், அன்றைய மாவட்ட ஆட்சியரின் மகன் — ஓர் இளைஞர் — தன் சக்திவாய்ந்த மோட்டார்பைக்கில், சைலன்சரை எடுத்துவிட்டு, மிக மிக வேகமாக அந்தச் சாலையில் செல்வார். சாலையில் மெதுவாக ஓரமாகச் செல்வோர் அலறியடித்து ஓரங்கட்டுவர், யாரும் ஒன்றும் செய்யமுடியாது. காரணம், அவர் செல்வாக்கு நிறைந்தவர்.

இது அண்மைய மதுரை. 1960—களை ’அண்மைய’ என்கிறேன். காரணம் — அடுத்து வரும் மதுரை ஈராயிரம் ஆண்டுகட்கு முந்தையது.

இதோ, இதைப் படியுங்கள்:

கால் இயக்கு அன்ன கதழ் பரி கடைஇக்
காலோர் காப்பக் கால் எனக் கழியும்
வான வண் கை வளம் கெழு செல்வர்

இது மதுரைக்காஞ்சி என்னும் சங்கப்பாடலில் இருப்பது, அடிகள் 440 — 442. நிச்சயம், பலருக்குப் புரிந்திருக்காது. இதோ, இதன் உரை:

காற்று ஓங்கியடிப்பதைப் போன்று பாய்ந்து செல்லும் குதிரைகளை ஓட்டி,
காலாட்கள் சூழ்ந்து காக்க, காற்றைப்போல் விரைந்து கடந்து செல்லும்,
மேகம் போன்ற ஈகையினையுடைய வளம் நிறைந்த செல்வர்.

இன்றைய செல்வாக்கு நிறைந்த இளைஞனையும், அன்றைய செல்வம் நிறைந்த இளைஞனையும் கண்டு சிரித்துக்கொண்டே மதுரை தன் இளமை மாறாமல் நிற்கிறது.

# 6. நன்னெறி வாழ்விற்கு முதன்மை அளித்த வ. சுப. மாணிக்கம்

— முனைவர் தேமொழி

வரும் தலைமுறையினர் வாழ்வைச் செம்மைப்படுத்தும் அக்கறை கொண்டவர்களாக இருந்து; அதே நோக்கை எண்ணம், சொல், செயல் ஆகியவற்றிலும் முன்னெடுப்பவர்களாகத் திகழ்பவர்கள் நம்மில் தோன்றுவது மனிதக்குலம்

பெற்ற பேறு. அவர்களுள் ஒருவர் மூதறிஞர் செம்மல் வ. சுப. மாணிக்கம் அவர்கள். அவர்

1. ஆத்திசூடி (ஔவையார்),
2. கொன்றை வேந்தன் (ஔவையார்),
3. மூதுரை (ஔவையார்),
4. நல்வழி (ஔவையார்),
5. நறுந்தொகை (அதிவீரராமபாண்டியர்),
6. நன்னெறி (சிவப்பிரகாசர்),
7. உலகநீதி (உலகநாதர்)

ஆகிய ஏழு நூல்களையும் வளர்பருவ இளைஞர்களுக்காக "ஏழிளந்தமிழ்" (நீதி நூல்கள்) என்ற தலைப்பில் அவற்றுக்குப் பொருள் எழுதித் தொகுத்து தமிழ் உலகுக்கு அளித்தார்.

*"ஆத்தி சேர் கொன்றை அழகு தமிழ் மூதுரை*
*பாத்தி சேர் நல்வழி பண்புலகம் – பூத்த*
*நறுந்தொகை நன்னெறி ஏழும் குழந்தைக்*
*குறுந்தமிழ் என்றறிந்து கொள்."*
[ — மூதறிஞர் செம்மல் வ. சுப. மாணிக்கனார்]

என்பது அவர் அளித்த பாடல். ஆத்திசூடி முதலிய இந்த ஏழு நூல்களையும் நம் முன்னோர்கள்

திண்ணைப் பள்ளிகளில் முறையாகப் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். இந்த ஏழு நூல்களையும் பத்து வயதிற்குள் நன்கு பொருளறிந்து மனனம் செய்து படித்துவிட்டால் மாணவர்களின் தமிழறிவும், தமிழ் இலக்கிய இலக்கண அறிவும், வாழ்வும் சிறக்கும் என்று நூல் முன்னுரையில் அவர் குறிப்பிடுகிறார். இந்த நூல்களின் கருத்துகள் சிறுவர்களிடம் கொண்டு செல்வதற்காகவும் போட்டிகள் பல நடத்தி, பரிசுகள் வழங்கி சிறுவர்களை ஊக்குவித்துள்ளார்.

வ. சுப. மாணிக்கம் அவர்கள் நன்னெறிகள் அறிவுறுத்தும் கல்வியில் ஆர்வம் மிகக் கொண்டவர் என்பதால் சிறுவருக்காக ஆத்திசூடி அமைப்பில் 'தமிழ்சூடி'; நல்ல கருத்துக்களின் தொகுப்பாக 'மாணிக்கக் குறள்'; திருக்குறளுக்குச் செவ்விய தெளிவுரை ஆகியன இயற்றி நன்னெறிச் சிந்தனைகளைத் தெளிவாகச் சிறுவர்களிடம் கொண்டு சென்றுள்ளார்.

வ. சுப. மாணிக்கம் புதுக்கோட்டை மாவட்டம் மேலைச் சிவபுரியில் ஏப்ரல் 17, 1917 அன்று வ. சுப்பையா – தெய்வானை இணையருக்கு மகனாகப் பிறந்தவர். பெற்றோரைச் சிறுவயதில்

இழந்த இவர், வளர் இளம்பருவத்தில் வட்டித்தொழில் கற்க பர்மாவில் பணிபுரிந்த பொழுது, கடை முதலாளியின் கட்டளைப்படி பொய் சொல்ல மறுத்ததால் வேலையில் இருந்து துரத்தப்பட்டு தாயகம் திரும்பினார். பின்னர் பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார் வழிநடத்துதலால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 'வித்துவான்' படிப்பில் (1940) முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற பின்னர், பி.ஓ.எல் (1945); எம்.ஓ.எல் (1948); எம்.ஏ (1951); பி.எச்.டி (1957) என்று தமிழ்க் கல்வியைத் தொடர்ந்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும்; காரைக்குடி அழகப்பா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும், முதல்வராகவும்; மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராகவும், புல முதன்மையராகவும்; மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணிபுரிந்தவர். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடங்கிய போது அதன் அமைப்புக் குழு தலைவராகவும் இருந்தார்.

'செம்மல்', 'முதுபெரும் புலவர்', 'பெருந்தமிழ்க்காவலர்', 'முதுபேராய்வாளர்', டி.லிட். பட்டங்களையும், பெற்றவர். தமிழக அரசால் 'திருவள்ளுவர் விருது' (1989, இறந்த பின்பு) அளிக்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டார். முப்பதுக்கும் மேற்பட்ட நல்ல பல நூல்களைத் தமிழுக்குத் தந்தவர். இவருடைய 'கம்பர்' என்ற நூல் தமிழக அரசின் முதற்பரிசு பெற்றது. தமிழக அரசு 2007—ல் இவரது நூல்களை அரசுடைமை ஆக்கியது. வ.சுப. மாணிக்கம் ஏப்ரல் 25, 1989 அன்று மறைந்தார்.

தமிழ்வழிக் கல்விக்காகத் தனி இயக்கம் தொடங்கியும், மழலையர் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தமிழே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும், தில்லை அம்பலத்தில் தமிழ் அரங்கேற வேண்டும் என்ற போராட்டங்களையும் முன்னெடுத்தார்.

எந்தவொரு காரியத்தையும் 'உ' 'சிவமயம்' போட்டு எழுதும் மரபிற்கு மாறாக 'த' (தமிழ்) என்று மாதிரி எழுதும் வழக்கம் கொண்ட தமிழ்ப்பற்றாளராகக் காலம் முழுவதும் வாழ்ந்தவர். அவருடைய தமிழ்ப்பணிகளுக்காக

'தமிழ் இமயம்' என்று தமிழ் அறிஞர்களால் போற்றப்பட்டார்.

இவர் எழுதியவற்றுள் என்னைக் கவர்ந்தது;

*நல்லாவின் பால் முழுதும் கன்றுக்கில்லை;*
*நறும்பூவின் மணமுழுதும் சோலைக்கில்லை:*
*நெல்லாகும் கதிர் முழுதும் நிலத்துக்கில்லை;*
*நிறைகின்ற நீர் முழுதும் குளத்துக்கில்லை*
*பல்லாரும் கனி முழுதும் மரத்துக்கில்லை:*
*பண்ணரம்பின் இசை முழுதும் யாழுக்கில்லை:*
*எல்லாமே பிறர்க்குழைக்கக் காணுகின்றேன்;*
*என் வாழ்வும் பிறர்க்குழைக்க வேண்டும்*
*வேண்டும்!*

[ — மூதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கனார்]

என்ற பாடல். இத்தகைய கருத்து தொன்று தொட்டு தமிழ் உலகில் பேசப்பட்டாலும் அன்றைய சங்கப்பாடல்கள் முதல், இன்றைய திரையிசைப்பாடல்கள் வரை அது பெண்ணின் வாழ்விற்கு மட்டுமே பொருத்திக் காட்டப்பட்டு வந்துள்ளது.

*பல உறு நறும் சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை*

*மலையுளே பிறப்பினும் மலைக்கு அவை தாம்*
*என் செய்யும்*
*நினையும்–கால் நும் மகள் நுமக்கும் ஆங்கு*
*அனையளே*
*சீர் கெழு வெண் முத்தம் அணிபவர்க்கு*
*அல்லதை*
*நீருளே பிறப்பினும் நீர்க்கு அவை தாம் என்*
*செய்யும்*
*தேரும்–கால் நும் மகள் நுமக்கும் ஆங்கு*
*அனையளே*
*ஏழ் புணர் இன் இசை முரல்பவர்க்கு அல்லதை*
*யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவை தாம் என்*
*செய்யும்*
*சூழும்–கால் நும் மகள் நுமக்கும் ஆங்கு*
*அனையளே*

— கலித்தொகை–9

என்ற வரிகள், தலைவனுடன் உடன்போக்கு சென்று விட்ட தலைவியைக் குறித்து வருந்தும் செவிலித்தாயை நோக்கி, இனிய மணம் தரும் சந்தனக்கட்டைகள் தன்னை அரைத்து மேனியில் பூசிக் கொள்பவர்களுக்கு அல்லாமல் அவை தான் பிறந்த மலைக்கு நறுமணம் தராது. உன் மகளும் அத்தகையவளே. நீரில் பிறந்த சிறப்புப் பொருந்திய நல் வெண்முத்துக்கள் அவற்றை

அணிபவருக்குப் பயன் தருமே அன்றி அதன் பிறப்பிடமான நீருக்கு அவற்றால் பயன் எதுவும் இல்லை. உனது மகளும் உனக்கு அவ்வாறே. யாழின் ஏழு நரம்புகளால் கூட்டி எழுப்பும் இனிய இசையால் இசைப்பவர் மகிழ்வாரன்றி, அதனால் யாழுக்கு எந்தப் பயனும் இல்லை. உன் மகளுக்கும் உனக்கும் உள்ள தொடர்பும் யாழ் எழுப்பும் இசைக்கும் யாழுக்கும் உள்ள தொடர்புதான் என்று பெண் தலைவனைச் சென்று சேர்ந்துவிடுவாள், பெற்றவர்கள் இந்த உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று முக்கோற்பகவர் கூறுவதாக அமைகிறது.

மாறாக, வ.சுப. மாணிக்கனார், எல்லாமே பிறர்க்கு உழைக்கக் காணுகின்றேன். என் வாழ்வும் பிறர்க்கு உழைக்க வேண்டும் வேண்டும் என்று பிறருக்கு உழைப்பவர்களுடன் இணைத்துக் கூறுவது கருத்தைக் கவர்வதாக அமைந்துள்ளது.

## 7. தூத்துக்குடி – சிற்றூர் முதல் குரூஸ் பர்னாந்து வரை: நூல் திறனாய்வு

— முனைவர் க.சுபாஷிணி




நூலாசிரியர்: ஜி.ரா.
பதிப்பு: மின்னங்காடி பதிப்பகம்
விலை: ரூ 300/–

நகர் உருவாக்கம் என்பது வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகின்ற ஒரு நிகழ்வு. உலகம் முழுவதும் மனித குலம் உருவாக்கிய பல நகரங்கள் இன்று சிற்றூர்களாகவும் பெரு நகரங்களாகவும் தலைநகரங்களாகவும் விரிவடைந்திருக்கின்றன.

